

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெறும் தேவர் ஜெயந்தி விழாவில் கலந்து கொள்வதற்காக விமானம் மூலம் மதுரை வந்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் வரவேற்றார்.



விருதுநகர் சாத்தூர் நெடுஞ்சாலை பட்டம்புதூரில் தமிழக முதலமைச்சர் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான தேர்வு செய்யப்பட்ட இடத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன், விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர் .

### கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய

# சிறப்பு ஊக்கத் தொகை விரைந்து வழங்க நடவடிக்கை!

## எடப்பாடி பழனிச்சாமிக்கு – அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் பதில்!



சென்னை, அக். 31 - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி 28-10-2024 அன்று தனது X- தளத்தில் கரும்பு விலை உயர்த்தாதது மற்றும் சிறப்பு ஊக்கத் தொகை டன் ஒன்றுக்கு ரூ.215/-ஐ தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக வழங்கவில்லை எனக்குறிப்பிட்டு பதிவிட்டுள்ள அறிக்கைக்கான சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் மறுப்பு அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 2021ஆம் ஆண்டு புதிய அரசு பொறுப்பேற்றவுடன் விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று வேளாண்மைத்துறைக்கென இதுவரை நான்கு தனி நிதிநிலை அறிக்கைகளை அளித்து விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டதன் காரணமாக 115 இலட்சம் மெட்ரிக் டன்களுக்கு மேலாக உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. மேலும் புதிதாக இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய மின் இணைப்புகள் வழங்கியது, புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கியது, கிராமப்புற விவசாயத்தை மேம்படுத்த கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தியது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்றப்பட்டுள்ளது.

கடந்த 2011-ம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பத்தாண்டுகால செயலற்ற அ.தி.மு.க ஆட்சியில் சர்க்கரை ஆலைகள் யாவும் அழிவு பாதையை நோக்கி சென்று கொண்டிருந்த நிலையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்த உடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி எடுக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் உயர்ந்து வருகிறது.

**கரும்பு விலை**

கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 2011 - ஆம் ஆண்டு முதல் 2021-ம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.2250-ல் இருந்து ரூ.500 மட்டுமே உயர்த்தி ரூ.2750 ஆக வழங்கப்பட்டது.

அறிவிக்கப்பட்ட கரும்பு விலையும் உரிய நேரத்தில் வழங்காமல் தாமதமாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அ.தி.மு.க ஆட்சி முடிவின் போது கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கரும்பு விலை நிலுவைத் தொகை ரூ.675.52 கோடியாக இருந்தது.

அ.தி.மு.க ஆட்சியில் 2018-ம் ஆண்டு கரும்புக்கு வழங்கப்பட்டு வந்த மாநில அரசு பரிந்துரை விலை ரத்து செய்யப்பட்டதுடன் கரும்பு விலை நிர்ணயம் சம்பந்தமான முத்தரப்பு கூட்டமும் நடத்தப்படவில்லை. இவ்வாறு சர்க்கரை ஆலைகளை அழிவுப்பாதைக்கு கொண்டு சென்றதை எதிர்கட்சித் தலைவர் மறைத்து, உண்மைக்கு புறம்பான செய்திகளை தற்போது கரும்பு விவாசயிகளின் மீது அக்கறை கொண்டுள்ளதைப் போல நாடகமாடுகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 2020-21 அரவைப் பருவம் முதல் 2023-24 அரவைப் பருவம் வரை கரும்பு விலையை டன் ஒன்றுக்கு ரூ.2750லிருந்து ரூ.2900, ரூ.2950, ரூ.3016.25 மற்றும் ரூ.3134.75 என படிப்படியாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து சர்க்கரை ஆலைகளின் கரும்பு அரவைப் பருவ காலம் செப்டம்பர் 2024 மாதத்தில் நிறைவடைந்த நிலையில் அனைத்து சர்க்கரை ஆலைகளிலிருந்தும் சிறப்பு ஊக்கத் தொகை பெறுவதற்கான தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் முழு விவரங்கள் அடங்கிய பட்டியல் 2024 அக்டோபர் மாதம் முதல் சர்க்கரைத்துறை அலுவலகத்தில் சரிபார்க்கும் பணிக்காக பெறப்பட்டு வருகிறது. அதன்படி தகுதி வாய்ந்த 32 சர்க்கரை ஆலைகளில் 28.10.2024 வரை 23 சர்க்கரை ஆலைகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒன்பது தனியார் சர்க்கரை ஆலைகளிடமிருந்து தரவுகளைப் பெறுவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகால செயலற்ற அ.தி.மு.க. ஆட்சியில் ஊக்கத்தொகை வழங்கப்பட்ட ஆண்டு முதல் 2017-2018 பருவத்திற்கு சுமார் எட்டு மாத கால அளவிலும், 2018-2019 பருவத்திற்கு சுமார் ஐந்து மாத கால அளவிலும், 2019-2020 பருவத்திற்கு சுமார் இரண்டு மாத கால அளவிலும் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் சுமார் ஒருமாத காலத்திலேயே தகுதி வாய்ந்த அனைத்து விவசாயிகளுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் இருந்து வருகிறார்கள்.

இந்நிலையில் கரும்பு விவசாயிகளின்மீது அக்கரை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2023-24 அரவைப் பருவத்திற்கு வழங்கப்பட வேண்டிய சிறப்பு ஊக்கத் தொகையை வழங்குவதற்கான அரசாணையை கடந்த 17.10.2024 அன்று பிறப்பித்துள்ளார்கள். அரசு வழங்கும் சிறப்பு ஊக்கத் தொகை சரியான தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுவதற்கு ஏதுவாக அரசாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் இதுவரை பெறப்பட்ட 23 சர்க்கரை ஆலைகளின் தரவுகள் சர்க்கரைத்துறை மற்றும் அரசு தரவு மையத்தில் தற்போது கூர்ந்தாய்வு செய்யப்பட்டு ஒன்பது சர்க்கரை ஆலைகளின் தரவுகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையிலான குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலான குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பெற்ற உடன் சம்பந்தப்பட்ட தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரிடையாக அனுப்பி வைக்கப்படும். பிற சர்க்கரை ஆலைகளின் தரவுகளும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஒப்புதல் பெற்று நான்கு வார காலத்திற்குள் தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு வழங்கிட துரித நடவடிக்கையினை இவ்வரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய சிறப்பு ஊக்கத் தொகையை விரைந்து வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், இன்று வரை சிறப்பு ஊக்கத் தொகையை கரும்பு விவசாயிகளுக்கு வழங்குவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுக்கவில்லை என தெரிவித்திருப்பது அடிப்படை ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### காஞ்சிபுரம் மாவட்டம் –

# திருப்பெரும்புதூர் அரசு பொது மருத்துவமனையில் ‘UWIN’ திட்டம்!

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

காஞ்சிபுரம்,அக்.31-- பிரதமர் அவர்கள் காணொளி மூலமாக நேற்று முன்தினம் (29.10.2024) இந்தியா முழுவதும் UWIN திட்டம் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் மனித நல செயல் திட்டத்தினையும் தொடங்கி வைத்தனர். காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசு பொது மருத்துவமனையில், 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டியதைத் தொடர்ந்தும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசு பொது மருத்துவமனையில் UWIN திட்டத்தை துவக்கி வைத்து, காலநிலை மாற்றம் மற்றும் மனித நல செயல் திட்டம் குறித்த கையேட்டினை வெளியிட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத்திற்கான கல்வெட்டினை திறந்து வைத்தார்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை சார்பில், தமிழ்நாட்டில் தேசிய தடுப்பூசி திட்டத்தின்கீழ் 11 வகையான தடுப்பூசிகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் அளித்து 12 வகையான தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் காசநோய், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், மஞ்சள் காமாலை, Hஇன்புளூயன் ஸாநிமோனியா மற்றும் மெனிஞ்ஜிடிஸ், இரண ஜன்னி, போலியோ, தட்டம்மை, ருபெல்லா, ரோட்டா வைரஸ் வயிற்றுப்போக்கு நோய், நியுமோகோக்கல் நியுமோனியா மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் (தொற்று நோய் பரவக்கூடிய அபாயமுள்ள 14 மாவட்டங்கள்) ஆகிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும், 9,5 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 8.77 இலட்சம் பச்சிளம் குழந்தைகள் அனைவருக்கும் தடுப்பூசி திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர். ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜனவரி மாதம், 2023 ஆம்ஆண்டு, UWIN சோதனைத் திட்டத்தை (Pilot Project) தொடங்கி வைத்தார்கள். UWIN ன்திட்டத்தின் மூலம் பயனாளிகளின் தடுப்பூசி விவரங்களை பின் தொடர்வும், தடுப்பூசி அமர்வுகளை கணினி மயமாக்கவும், தடுப்பூசி அறிக்கையை நிகழ்நேரத்தில் பதிவு செய்யவும், தடுப்பூசி அளித்ததற்கான. மின்னணு சான்றிதழை பதிவிறக்கவும் மற்றும் குறுந்தகவல்கள் மூலம் பயனாளிகளுக்கு நினைவூட்டல் அளிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் UWINன் சோதனை திட்டமானது திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஜனவரி 27, 2023ம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப் பட்டது. மேலும் ஆகஸ்ட் 1, 2023ம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. மேலும். 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுகாதார பணியாளர்களுக்கு. திறன் பயிற்சி வழங்கப்பட்டது.



1. பயனாளிகளுக்கான சுயபதிவு 2.ABHA உருவாக்கம் 3.தடுப்பூசி மையங்களைத் தேர்ந்தெடுத்தல் 4.தடுப்பூசிக்கான முன்பதிவை திட்டமிடல் 5. தடுப்பூசி பதிவுகளை மின்னணுமயமாக்குதல் 6. மின்னணு சான்றிதழ் பதிவிறக்கம் 7. தடுப்பூசிக்கான அறிவிப்புகள் மற்றும் நினைவூட்டல்கள் 8.தடுப்பூசி தவணைகளுக்கான இடைவெளிகளை உறுதிசெய்தல் 9. இந்தியாவில் எங்கேயும் எந்நேரத்திலும் தடுப்பூசி பெறலாம். 10. Safevac உடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது 11. பயனாளிகளின் விவரம் மற்றும் அடுத்ததவணைக்கான பட்டியல் பெறுதல் ஆகியவை UWIN பயன்பாடுகளாகும். இத்திட்டத்தின்கீழ்: இதுவரை 6,13,171 கர்ப்பிணி தாய்மார்களும், 7,70,144 பச்சிளம் குழந்தைகளும், 75,928 ஒன்று முதல் ஐந்து வயதில் குழந்தைகளும் பயனடைந்துள்ளனர்.

மேலும் பருவநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கான மாநில செயல் திட்டம் (SAPCCHH): பருவநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கான மாநில செயல் திட்டம் என்பது பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பல்வேறு தாக்கங்களைப் பரிசீலிக்க உருவாக்கப்பட்ட செயல் திட்டத்தின் வடிவமைப்பு ஆகும். பருவநிலை மாற்றத்தால் பேரிடர்களும் மற்றும் நோய் அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த செயல்திட்டம் 2027 ஆண்டு வரை தொலை நோக்கு கண்ணோட்டத்துடன் கூடிய செயல் திட்டம் ஆகும். இந்த செயல் திட்டத்தின் அடிப்படையில், மாவட்ட செயல் திட்ட நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள்: மழை குறைவினால் வறட்சி ஏற்பட்டு உணவு தட்டுப்பாடு ஏற்படலாம். கடற்கரையோர மாவட்டங்களில் வெள்ள அபாயம் ஏற்பட வாய்ப்பு அதிகம். கோடை காலங்களில் கடும் வெப்ப அலை உருவாகும் கொசு மற்றும் விலங்கினால் பல்வேறு நோய் பரவல் ஏற்படக்கூடும். பருவநிலை மாற்றத்தால் ஒரு வருடத்திற்கு பெய்யக்கூடிய மழைப்பொழிவு ஒருசில நாட்களில் கடும் மழைப்பொழிவாக ஏற்படுகிறது. நீரினால் நோய் தொற்று ஏற்பட அபாயம் உள்ளது.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய தாக்கங்களை குறைக்க பருவநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கான மாநில செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தணிப்பது மட்டுமல்லாமல் பொது மக்களுக்கு ஆரோக்கியமான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கும் திறம்பட செயல்படுத்துவதற்கும், அரசு நிறுவனங்கள், சுகாதார வல்லுநர்கள் மற்றும் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படுத்த வலியுறுத்துகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தொடர்ந்து தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கும் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழ்களையும், தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும் அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தமிழ்நாடு தேசிய நல திட்ட இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், திருப்பெரும்புதூர் ஒன்றியக் குழுத்தலைவர், எஸ்.டி.கருணாநிதி, திருப்பெரும்புதூர் பேரூராட்சித் தலைவர் திருமதி.ச.சாந்தி, பொது பணித் துறை செயற்பொறியாளர் கு.சிவசண்முகம் சுந்தரம், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்), மரு.கோபிநாத், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.த.ரா.செந்தில், உள்ளாட்சி மன்ற பிரதி நிதிகள் மற்றும் மருத்துவ ர்கள் கலந்துக் கொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாநகராட்சி அதியமான் நகர், மொடக்கத்தான் கண்மாயில் இருந்து நீர் வெளியேறும் பகுதியில் பணி நடைபெறும் இடங்களில் ஆய்வு செய்த போது எடுத்தபடம். உடன் மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார், கிழக்கு மண்டல தலைவர் வாசுகி சசிக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், கழகத்தினர் உடன் உள்ளனர்



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மற்றும் நெல்லை, பாளை,தொகுதி பார்வையாளர் அறிமுகக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். பின்னர் கழக இளைஞரணி சார்பில் நடைபெற்ற என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் நடந்த பேச்சுப் போட்டியில் இறுதிப் போட்டியில் நெல்லை மத்திய மாவட்டத்திலிருந்து தேர்வு பெற்ற ரகுமாள், அகமது சுல்தானா, அர்ச்சனா ஆகிய 3 பேர்களை பாராட்டி பரிசு வழங்கினார். உடன் தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், முத்துச்செல்வி, மாலைராஜா, சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், சரவணன், வெங்கடேஷ், மீரான் மைதீன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# முரண்களை வெல்லும் திராவிடம்!

மொழி, இனம், மதம், நாடு என எல்லாவற்றையும் தாண்டி, உலக மக்கள் அனைவரையும் நேசிக்கும் திராவிடம்! ஆனால், தமிழ், தமிழர் உரிமைகளை ஒருநாளும் விட்டுக் கொடுக்காது!

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று உரத்து முழங்கும் திராவிடம். ஆனால், பிறப்பின் அடிப்படையிலான சாதியின் பெயரால் ஒருவர் ஒடுக்கப்பட்டிருந்தால், அவர் சாதியை அறிந்து அவருக்கு சாதியின் பெயரால் இடஒதுக்கீடு வழங்கும்!

‘ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே தேர்தல்’ என்னும் குரலை என்றும் எதிர்க்கும் திராவிடம்! ஆனால், ‘ஒன்றே குலம், அனைவருக்கும் ஒரே சுடுகாடு’ என்பதை மகிழ்ந்து வரவேற்கும்!

‘கோயிலுக்குப் போகாதே, பகுத்தறிவுப் பாதையைத் தேர்ந்தெடு’ என்று சொல்லும் திராவிடம்! ஆனால் கோயிலுக்குப் போக விரும்பும் ஒருவரின் உரிமையை யாரேனும் தடுத்தால், தடுக்கப்பட்டவரின் கைகளைப் பிடித்துக் கோயிலுக்குள் அழைத்துச் செல்லும்!

‘பெண்களே உங்களுக்கு மட்டும் ஏன் தாலி? தமிழர் திருமணத்தில் தாலி என்பது இடையில் வந்த பழக்கம்’ என்று அறிவுறுத்தும் திராவிடம். ஆனால், இசை வேளாளர் சமூகத்தில் பிறந்த பெண்கள் தாலி கட்டிக்க கொள்ளக் கூடாது என்று சொன்னால், ஏன் என்று கேட்டு அவர்களின் கழுத்தில் தாலி கட்டச் சொல்லும்!

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனைக் கொண்டாடும் திராவிடம்! ஆனால் தமிழ் மன்னர்கள் என்னும் ஒரே காரணத்திற்காக, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, ராஜசூயம் வேட்ட பெருநற் கிள்ளி ஆகிய மன்னர்களின் ஆரியப் பண்பாட்டின் அடிமைத்தனத்தை என்றும் ஏற்காது!

இவற்றை முரண்கள் என்று கருதுவோர், திராவிடக் கோட்பாட்டின் அடித்தளத்தை அறிந்து கொள்ளாதவர்கள் என்றே பொருள்!

(26.10.2024 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற ‘திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க’ தொடக்க விழாவில்.....)



அன்புடன்
**சுப.வீரபாண்டியன்**
தலைவர் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை